RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt25114

OPEN ACCESS

# பெண்ணிய நோக்கில் எஞ்சோட்டுப் பெண்

சி. கீர்த்தனா [அ, *], ச. தனலெட்சுமி [ஆ]

[அ] தமிழ்த்துறை, தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா

[ஆ] தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர், தமிழ்நாடு, இந்தியா

# Enjottu woman in a feminist perspective

C. Keerthana [a,*], S. Dhanalakshmi [b]

[a] Department of Tamil, Standard Fireworks Rajaratnam College for Women, Sivakasi, Tamil Nadu, India

[b] Department of Tamil, Sri S. Ramasamy Naidu Memorial College, Sattur, Tamil Nadu, India

* Corresponding Author: keerthanas@gmail.com

Received: 16-09-2024
Revised: 17-01-2025
Accepted: 21-01-2025
Published: 28-01-2025

Check for updates

**ABSTRACT**

This world was created by both men and women. The act of perceiving and knowing the world is still performed through the language of men. Women have been losing their identities throughout human history. Women are the equal partners in the movement of life. Both men and women are equal in all areas of life. But there is a lot of suffering and injustice faced by women. Feminism is the act of exposing such female-oriented thoughts and problems. Feminism is also the act of trying to change the inferiority of women. Feelings such as suppressing and oppressing women occur in society and the workplace. The steps taken to change this situation are called ‘feminism’. Among the poets of this time, Tamizhachi Thangapandian is the one who has embodied feminist thoughts in many places in her work. It should be noted that all the feminist categories mentioned in feminist criticism are included in the poetry collection ‘Enjottu Pen’. This research article aims to examine how she has recorded feminist ideas such as women's inner struggle, feminist problems, and oppression through her work in the poetry collection 'Enjotup Pen'.

**Keywords:** Enjotup Pen, Tamizhachi Thangapandian, Women, Society

## முன்னுரை

ஆண் பெண் ஆகிய இருவராலும் ஆக்கப்பட்டதே இவ்வுலகம். உலகத்தை உணர்தல், அறிதல் ஆகிய செயல்பாடு இன்றுவரை ஆண்களின் மொழியால் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. மானுட வரலாற்றில் பெண்கள் தங்கள் அடையாள்களை இழந்து வருகின்றனர். வாழ்க்கை எனும் இயக்கத்தில் சரிபாதியாக இருக்கக்கூடியவள் பெண். வாழ்வின் எல்லாத்தளங்களிலும் ஆண், பெண் இருபாலரும் சமமானவர்கள். ஆனால் பெண்களுக்கு ஏற்படும் துயரமும், அநீதியும் ஏராளம். இத்தகைய, பெண் சார்ந்த சிந்தனைகளையும், சிக்கல்களையும் வெளிக்கொணர்ந்து வருதலே பெண்ணியம். பெண்களின் தாழ்வு நிலையை மாற்ற முயலுதலும் பெண்ணியம் ஆகும். சமூகத்திலும், வேலைத்தளத்திலும் பெண்களை அடக்குவது, ஒடுக்குவது போன்று உணர்வு நிலைகள் நடைபெறுகிளது. இந்நிலையை மாற்ற எடுக்கப்படும் படிநிலைகளே ‘பெண்ணியம்’ என்றாகும். இக்காலக் கவிஞர்களில பெண்ணியச் சிந்தனைகளை; படைப்பின் பல இடங்களில் மெய்ப்பித்துள்ளவர் தமிழச்சி தங்கப்பாண்டியன் ஆவார். பெண்ணியத் திறனாய்வில் குறிப்பிடும் பெண்ணிய வகைகள் முழுவதும் ‘எஞ்சோட்டுப் பெண்’ எனும்

கவிதைத் தொகுப்பில் இடம் பெறுவதை அறிதல் வேண்டும். அவர் தம் படைப்பின் வழி பெண்ணின் ஆழ்மனப் போராட்டம், பெண்ணியச் சிக்கல், அடக்குமுறை என்று பெண்ணியம் சார்ந்த கருத்துக்களை 'எஞ்சோட்டுப் பெண்' எனும் கவிதைத்தொகுப்பில் பதிவு செய்துள்ளார் என்பதை ஆராயும் நோக்கில் இவ்ஆய்வு கட்டுரை நகர்கின்றது.

## பெண்ணியம்

பெண்ணியம் என்ற கோட்பாடு பெண்களை நவீன மயமாக்கும் சிந்தனையின் எழுச்சியாகும். சமூக, அரசியல், பொருளாதாரம் போன்ற அமைப்புகளில் ஆண் ஆதிக்கத்தை இனம் காட்டுவது. தாய்வழிச் சமூக அமைப்பிலிருந்து பின் தந்தை வழிச் சமூக அமைப்ப தோற்றம் பெற்றதையும், அம்மாற்றத்தின் விளைவையும் எடுத்துரைப்பதே பெண்ணியம் என்பதாகும்.

## பெண்ணியம் சொற்பொருள் விளக்கம்

பெண்ணியம் எனும் ஆங்கிலத்தில் பெமினசம் (FEMINISM) என்று அழைக்கப்படும். பெண்ணியம், பெண்நிலைவாதம், பெண்ணுரிமை என்று பலவாறு பெண்ணியம் அழைக்கப்படுகின்றது. 'பெமினா' என்ற சொல்லுக்கு 'பெண்' என்று பொருள். பெமினா எனும் சொல்லிருந்தே 'பெமினிசம்' எனும் சொல் உருவானது. "மகளிரியம்" எனும் சொல்லே 1890 வரை பெண்ணியத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. 'அத்தீனா-கிரேக்கப் பெண் தெய்வக்கோயில்' எனும் நூலில் தான் மகளிரியம் என்ற சொல்லிற்கு பதில் 'பெண்ணியம்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.

கல்வி, மருத்துவம், பொருளாதாரம், வரலாற்றியல், அறிவியல் என விரிந்த பல துறைகளில் பெண்களின் நிலையினை ஆராய்வதே 'பெண்ணியம்'. பெண்ணியம் மற்ற கோட்பாடுகளைப் போல ஒரு கோணத்தில் மட்டும் இருந்து கருத்தாக்கத்தைப் பெறாது. பல்வேறு கோட்பாடுகளிலிருந்து கருத்தாக்கத் தளத்தை வடிவமைத்துக் கொண்டுள்ளது. பெண்ணியம் என்ற சொல் பெண்களின் உரிமைக்காகப் போராடும் புதிய இயக்கமாகும்.

## பெண்ணியம் குறித்த அறிஞர்கள் கருத்து

பெண்ணிய இயக்கத்தின் முன்னோடியாக 'மேரிவுல்டஸ்டன் கிராப்ட்' அழைக்கப்படுகின்றார்கள். பகுத்தறிவு என்பது மானுடத்தின் பண்பு என்றால், மாந்தர் அனைவரும் சமம் என்றால், ஆண் பெண் வேறுபாடு ஏதுமில்லை. ஆண்களைப் போலவே பெண்ணும் பகுத்தறியும் திறன் பெற்றவள் தான். அறியாமை அவள் குற்றமன்று. அத்தகைய சூழலுக்கு அவளை ஆளாக்கியது ஆண்கள் தான். இதற்கு காரணம் கல்வியின்மையே என்கிறார் மேரிவுல்ஸ்டன்கிராப்.

'பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம்" என்கிறார் கார்டன்.

பெண்ணியம் என்பதற்குப் 'பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஓர் ஆற்றலை உருவாக்கி, பெண்மை அதன் தன்மையில் ஆண்களோடு மாறுபட்டிருப்பினும் அது ஆண்மைக்கு நிகரானது என்பதை ஏற்றுக் கொள்ள வைப்பது' என்று விளக்கம் தருகிறார் ஜெயின்.

ஃபிராய்டின் உளவியல் கொள்கையினை உற்று நோக்குகையில், பொறாமைக்குணம் தான் உலகபப் பொதுவானது. இத்தகைய பொறாமை என்ற சிக்கலின் காரணமாகத்தான் பெண்களின் தாழ்வுநிலைக்கு பெண்களே காரணம் என்கிறார் ஃபிராய்டின் உளவியல் கொள்கையின் அடிப்படையில் பெண்ணியத்தை விளக்கியவர்களில் குறிப்பிடத்தக்கவரான ஜுலியட் மிட்செல் ஆவார்.

## உளவியல் பெண்ணியம்

உளவியல் பகுப்பாய்வு என்பது பெண்ணின் சுயமான சிந்தனைகள், விருப்பங்கள், உணர்வுகள், ஆசைகள், எதிர்பார்ப்புகள் இவற்றின் முறிவுகள், சிதைவுகள் முதலியவை உள்ளத்தே

அழுத்தப்படுகின்றன. அவை ஏற்புடையச் சூழல் வரும் பொழுது பல வடிவங்களில் குறியீடுகளாகவோ, படிமங்களாகவோ, சொற் சிதறல்களாகவோ வெளிப்படுகின்றன. இவற்றை பிரெஞ்சு பெண்ணியம் என்றும் கூறலாம். நினைவின் வழி வாழும் பெண்களின் உணர்வுகளையும் உளவியல் பெண்ணியம் எடுத்துரைக்கிறது. எஞ்சோட்டுப் பெண்ணில் அப்பாவை பற்றிய ஏக்கத்தையும், நினைவலையையும், தேடலையும் தமிழச்சி,

"தின்பதற்கு இனிப்பு மிட்டாய்

உடைத்து விளையாட பொம்மை

உதறி எறியப் பழங்கள்

எல்லாமும் கொடுத்தப் பின்பும்

அம்மாவிற்காய் ஏங்கி

அலறி அழுகின்ற

படப்பிடிப்பில் பங்கெடுப்பதற்காய்

ஏழைக் குழந்தைப்போல்

தவிப்பாய் இருக்கிறது எனக்கு - அப்பா

உங்களை இழந்துவிட்ட பிறகு." (எ.பெண்- ப.எண்.39)

என்று தொடரும் கவிதையில் அனைத்தும் இளம்பருவத்தில் இருந்தாலும் ஆழ்மனமானது அப்பாவைத் தேடி அலையும் உள்ளப்பாங்கினை கவிஞர் விவரித்துள்ளார். நினைவு என்பது நான்கு பகுதிகளைக் கொண்டது என்று உளவியல் அறிஞர்கள் கூறுவர். 'அனுபவம் அல்லது கற்றல் கற்ற அல்லது அனுபவித்து உணர்ந்தவை மனத்தில் இருத்தி வைக்கப்படும். இவ்வாறு அமையும் நினைவின் பகுதியை மனத்திருத்தல் எனலாம். இப்படி மனத்தில் இருப்பனவற்றை நாம் நினைவூட்டிக் கொள்கிறோம். இந்நினைவூட்டுதல் மீட்டுக்கொணர்தல் அல்லது மீட்டு அறிதல் என இருவகையாக அமைகிறது என்பர்'1 உளவியல் அறிஞர். இதனை, ஏக்கம் எனும் தலைப்பில் அமையும் கவிதையில், "செம்மண் புழுதிப் பொடிசுகள்" எனத் தொடங்கும் கவிதையில்

"ஒரு மாலை நேரத்து

மாரடைப்பில்

பாராமல் எனைப் பிரிந்த

என் அப்பாவைத் தவிர" (எ.பெண்- ப.எண்.55 -58)

என்று நினைவில் வாழும் நிலையையும், என் அப்பாவைத் தவிர அந்தக் கிராமத்தில் எனக்கு எல்லாமும் காத்திருக்கின்றன என்று புலப்படுத்துகிறார்.

## மிதவாதப் பெண்ணியம்

ஆண்களுக்கு நிகரான சமவுரிமையைக் கோருகிற சிந்தனையே மிதவாதப் பெண்ணியம் ஆகும். பதினெட்டாம் நூற்றாண்டில் மேலை நாட்டில் தொடங்கிவிட்டது இப்பெண்ணியம். பெண்ணியத்தின் தாய் எனப் போற்றப்படும் அமெரிக்கப் பெண்ணியவாதி பெட்டிஃபிரைடன் மிதவாதப் பெண்ணியச் சிந்தனைகளை முன்வைத்தவர்களுள் முன்னோடியாவார். "ஆணுக்குள்ள சுதந்திரமும் உரிமையும் பெண்ணுக்கும் உண்டென்று கூறியதோடு, சுதந்திரமாய்த் தான் விரும்பியதை மேற்கொள்ளும் உரிமை ஆண்மையும் அன்று: பெண்மையும் அன்று: அது மனிதாமாகும்" என்று அழுத்தமாகப் பேசினார். பெண்களைப் பற்றிய கருத்துப் பதிவு மனிதமாக இல்லாமல் பெண்ணாக இருப்பதைக் கடுமையாகச் சாடுகிறார்"

தமிழில் இத்தகையச் சிந்தனைகளைக் கொண்டும் தன் எழுத்தை நடத்திச் செல்பவர் தமிழச்சி. விடுதலை எனும் தலைப்பில் அமைந்த கவிதையில்,

“கதவுகளையும்

திரைச்சீலைகளையும் தாண்டி

சுவர்களில் முதுகு தேய்த்து

சன்னல் கம்பிகளில் தயங்கியபடி

மிதியடிகளில் நிதானித்து

இறுக மூடிய குழாய்களின்

இடைவெளிகளில் கசிந்து

குளியலறைத் தண்ணீருடன்

வெளியேறுகிறது

நிறுத்தப்பட்டிருந்த வியர்வையுடன்

பூட்டியிருந்த அறைக்குள்

மூச்சடைத்திருந்த காற்று” (எ.பெண்- ப.எண்.61)

என்பதில் பெண்ணிய சிக்கல்களையும், அறைக்குள் அடைந்திருந்த காற்றாக பெண் அடக்கலையும், வெளியேறும் காற்றாக பெண் விடுதலையையும் குறிப்பதாக அமைகின்றது. ஆணுக்கு நிகராக பெண் விடுதலையாக, சுதந்திரமாக இருக்க விரும்புவதை கவிஞர் எடுத்தியம்புகிறார்.

## தீவிரவாதப் பெண்ணியம்

ஆண், பெண் மனதில் குறிப்பாக ஆழமாக நனவிலி மனத்திலே பதிந்த ஆணாதிக்கக் கூறுகளை சிறிதும் அசைத்து விட முடியாது என்பதை கட்டுடைக்கவே தீவிரமான முடிவுகளை பெண்கள் மேற்கொள்ளத் துணிந்தனர். இத்தகையச் சூழலால் சமூகத்தைத் தன் பக்கம் திசைத் திருப்புவதாக எண்ணினர் இப்பெண்ணியவாதிகள்.

“ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே நடப்பது உரிமைப்போராட்டம். ஆணை எதிரியாகக் கருதுவதோடு அவர்தம் மேலாண்மையை முற்றிலுமாக நீக்குவது அவசியம். எதிர்பாலினத் திருமண முறையை ஒதுக்கிவிட்டு மகளிர் ஒருபால் புணர்ச்சியில் ஈடுபட வேண்டும். பெண் அடக்குமுறைக்கு இன்று நிலவும் எதிர்பாலியத் திருமண முறையான குடும்பமே அடிப்படைக் காரணம்"3

என்று சுறுகின்றனர் ‘மோதிரம் என்றொரு போதிமரம்’ எனும் தலைப்பில் அமைந்த கவிதையில் அடங்கியிருந்தப் பெண் வீறுகொண்டு எழுகிறாள். துஷ்யந்தன் முன் தானும் ஓர் அன்னையான ஆனந்தத்தில் நிற்க, அங்கு

“அடையாள மோதிரம்

தொலைந்த

அவலத்தால் நிராகரிக்கப்பட்ட

அங்குதான்

அவளுக்கு அறிவுறுத்தப்படுகின்றது

அங்கீகாரமும்

அடையாளமும் அவசியமென”

உணரும் சூழலை கவிஞர் வடித்துள்ளார். மேலும், சகுந்தலையின் அன்னை கூறும் அறிவுரையானது,

“அரண்மனைப் பணிப்பெண்டிரில்

ஒருத்தியாகவாவது உடனிருந்து

உன் கணவருக்கு அருகாமையில்

காத்து நிற்பதே கற்பொழுக்கம்”

எனக் கைக் கழுவிச் சென்றுவிட என்றவாறு அமைகின்றது. கணவனே கண்கண்ட தெய்வம் என வாழ வேண்டும் என்று பெண்களை கட்டுக்குள் ஆளாக்கும் செய்தியையும் கவிஞர் கூறுகிறார். மேலும் பிற பெண்களை நாடிச் சென்று மீண்டும் சகுந்தலையிடம் வரும் துஷ்யந்தனை,

“அம்ஸபாடிகளையம்

வசுமதியையும்

அந்தப்புரத்தில் அமர்த்திய பின்பு

என்னை மறந்து

அவர்தமை மறந்து

பின்

என்னை நினைத்து

அவர்களைத் துறக்க

மோதிரமென்ன

உன் கடவுச்சீட்டா”

என்று பிறன்மனை மற்றும் மனைவியை விட்டு மற்ற பெண்களை நாடிச் சென்று வரம் கணவர்களை கண்ணகி போல ஏற்று வாழ வேண்டிய அவசியம் இல்லாததையும், பெண் என்பவள் அடக்குமுறைக்கு உள்ளாகமல் கேள்வி எழுப்புவதையும் கவிஞர் விரும்புகிறார். இறுதியாக சகுந்தலை துஷ்யந்தனை நோக்கி,

“முத்திரை மோதிரமும்

குலக்குறியும்

முன் மொழிகின்ற

புறஅடையாளங்களுக்குள்

அடிமைப்பட்டுக் கிடக்க அல்ல

என் பிறப்பு” (எ.பெண்- ப.எண். 157-165)

என்று கனலில் பறக்கும் நெருப்புப் பேச்சினை எழுத்தில் வடித்துள்ளார் தமிழச்சி. உன் வாரிசினை நீ அழைத்துச் செல் இந்த அகிலத்திற்கே நான் அன்னை என்று கூறி மரபினை கட்டுடைக்கின்றாள்;. கணவர் வீட்டில் விருப்பு வெறுப்புகளை அனுசரித்து குழந்தைக்காக வாழும் பெண்கள் ஏராளம். அந்த வகையில் பாசப்பிணைப்பான சமூகத்தில் பெண்கள் ஒரே வேலையைச் செய்யும் இந்நிலையை மாற்றும் முனைப்புடன் இக்கவிதை அமைகின்றது.

## முடிவுரை

ஒவ்வொரு படைப்பாளியும் ஒவ்வொரு விதமாய் கருத்தைப் பதிவு செய்ய முனைந்தாலும் இலக்கு என்பது ஒன்றே. பெண் சுதந்திரம், பெண் சமத்துவம், பெண் விடுதலை என்று பெண்மைப்

பற்றிய புரிந்துணர்வும், கோரிக்கையும் ஆகும். தமிழச்சி தங்கப்பாண்டியனும் தன் படைப்புகள் பலவற்றில் பெண்ணியச் சிந்தனைகள் பல விதைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 'எஞ்சோட்டுப் பெண்' எனும் கவிதைத்தொகுப்பில் பெண்ணியச் சிந்தனைத் தாக்கம் அதிகமாகவுள்ளது. இவ்ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிட்ட கவிதைகள் மற்றும் இன்னும் பல கவிதைகளில் பெண்ணியம் புலப்பட்டு வருவதை அறியமுடிகின்றது.

## References

சந்தானம் எஸ். கல்வி உளவியல், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.

பஞ்சாங்கம் க, இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

© The Authors 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License